2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் உள்ள தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ளடங்கிய ஊராட்சி ஒன்றியம். தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் எந்தவிதமான கல்வி நிறுவனங்களும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் இல்லை. எனவே, பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நமது அரசு பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தை தா. பழூரில் அமைத்துத் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை குறித்து விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

சமுதாயக்கூடம்

***5387—திரு. சபா. இராசேந்திரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய சமுதாயக்கூடம் கட்டுவது, அங்கு வசிக்கும்

[*2022 ஏப்ரல் 12*

மக்கள்தொகை, அருகிலுள்ள சமுதாயக்கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகிய முன்னுரிமைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று பதில் சொல்லியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். திருவாமூர் ஆதி திராவிடர் குடியிருப்பின் மக்கள்தொகை 2,500 ஆகும். அந்த ஊராட்சியின் மக்கள்தொகை 12,500 ஆகும். அந்தப் பகுதி பொருளாதாரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலேயே அதற்கான இடமும் இருக்கிறது. சர்வே எண் 110/1*B*–யில் 10 சென்ட் நிலத்தைக் கண்டறிந்து, தேர்வு செய்திருக்கிறார்கள். மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரும்,* TAHDCO *உதவிப் பொறியாளரும் அதற்கான மதிப்பீட்டைச் செய்திருக்கிறார்கள். இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பண்ருட்டிக்குத்தான், தனியார் திருமண மண்டபங்களை நாடிச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, சமத்துவபுரத்தில் மட்டுமல்லாது அனைத்து நிலைகளிலும், அனைத்துப் பகுதிகளிலும் சமூக நீதியை நிலைநாட்டிக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் ஆட்சியில், இந்தப் பகுதியிலே சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டால் அனைத்து சமுதாயத்தினரும் இந்தச் சமுதாயக்கூடத்தைப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே, அவசியம் கருதி, இந்தச் சமுதாயக்கூடத்தை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடும் திருவாமூரில் சர்வே எண் 110/1B–ல் சுமார் 5 சென்ட் அளவு ஆதி திராவிடர் நத்தம் வகைப்பாட்டில் இடம் உள்ளதாக மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் தெரிவித்துள்ளார். ஆனால், சமுதாயக்கூடம் அமைக்க 11 சென்ட் முதல் 20 சென்ட் வரை இடம் தேவைப்படுகிறது. சமுதாயக்கூடம் அமைக்க கோரப்பட்டுள்ள நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவாமூரிலிருந்து காமாட்சிப்பேட்டை செல்லும் வழியில் உள்ள சமத்துவபுரத்தில் ஒரு சமுதாயக்கூடம் பயன்பாட்டில் உள்ளது. சமுதாயக்கூடம் அமைக்கப்பட வேண்டிய இடத்திற்கு அருகில் ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவில் இத்துறையின் மூலமோ அல்லது சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் நிதி ஒதுக்கீடு செய்தோ சமுதாயக்கூடம் கட்டப்பட்டிருந்தால், அங்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க வழிவகையில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துவிட்டு, இப்போது வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள். எனவே, இந்த இடத்தில் சமுதாயக்கூடம் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைப்பற்றி நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அங்கே பிரதான சமுதாயக்கூடத்தை அமைப்பதற்கான சுமார் 50 இலட்சம் ரூபாய் நிதியையாவது ஒதுக்கி, அவர்கள் அதை அமைத்துத் தருகின்றபட்சத்தில், கூடுதல் வசதிகளுக்குத் தேவையானவற்றை எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல எனது தொகுதிக்குட்பட்ட மேல் வடக்குத்து பகுதியிலே மயானப் பாதை தேவைப்படுகிறது. அங்கே தனியார் விளைநிலங்கள் வழியாக அவர்கள், இறந்தவர் உடலை எடுத்துச் செல்கின்றனர். அதைப்போல, கீழ் வடக்குத்து பகுதியிலும் மயானமே இல்லை.*

[2022 ஏப்ரல் 12

இங்கே பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் பேசியபோது மயானத்தைப்பற்றி சொன்னார். அதைப்போல, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் கோரிக்கை இருக்கிறது. எனவே, மயானம் மற்றும் மயானப் பாதை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளில் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும், துறையும் கவனம் செலுத்தி, அதற்கு உரிய பரிகாரம் காண வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையைப் பெற்று, நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, வேறு தகுதியான இடத்தில் சமுதாயக்கூடம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர்கள் மயானம் மற்றும் மயானப் பாதை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் மயானம் மற்றும் மயானப் பாதை இல்லாத இடங்களில் உடனடியாக நிதியொதுக்கீடு செய்து மயானம் மற்றும் மயானப் பாதை ஏற்படுத்தித்தர உத்தரவிட்டுள்ளார்கள். அதுகுறித்த தேவையான முன்மொழிவுகள் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து மயானப் பாதை வசதியைச் செய்துதர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]